## 28.38 உயர்நிலைக்குழுவின் அறிக்கை – ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்குதல்

சுற்றுப்புறம் வனம் (வனம் 6) துறை

அரசு செயலர்

**கடித எண். 17108/வனம்.6/99.1 நாள்– 20.7.99ன் கடித நகல்**

பொருள்: வனம் – மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளிப்பது குறித்து உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் – ஆணை வெளியிடப்பட்டுள்ளது – ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள் பற்றிய தொடர் ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண். 320, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 11.1.97.
2. அரசாணை (நிலை) எண். 100, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 22.5.98.
3. ஊரக வளர்ச்சித்துறையின் நேர்முக கடித எண்.14532/சி4/ 99, நாள் 11.5.99.
4. அரசாணை (நிலை) எண்.139, சுற்றுப்புறம் வனம் (வ.6) துறை, நாள் 15.6.99.
5. ஊரக வளர்ச்சித்துறை கடித எண். 2496/சி4/99, நாள் 29.6.99.

பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகக் கொண்டு அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகளுக்கு வனத்துறை மூலம் வளர்க்கப்பட்ட சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள், காடுகளின் சிறு உற்பத்திப் பொருட்கள் விறகு மற்றும் தீவனம் முதலானவைகளை மேம்படுத்த கூடுதல் அதிகாரங்கள் வழங்கலாமென்ற பரிந்துரைகளை அரசு ஆய்வு செய்து காப்புக் காடுகள் மற்றும் வன உயிரின உய்விடங்கள் நீங்கலாக இதர பகுதிகளில் செயல்படுத்த அரசின் முடிவுகள் பார்வை நான்கில் உள்ள அரசாணையில் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேற்கண்ட ஆணையிலுள்ள அறிவுரைகளைத் தொடர்ந்து ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் உள்ளாட்சிகளுக்கு ஆய்வு கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள் குறித்து கீழ்க்கண்டவாறு செயல்படுத்தலாமென அரசு முடிவு செய்து அதன்படி வனத்துறை செயல்படுமாறு அறிவுறுத்தப் பணிக்கப்பட்டுள்ளேன்.

### 1. ஊராட்சி ஒன்றியங்கள்

### 2. சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள்

573. வனத்துறை செயல்படுத்தும் சமூக, தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் பற்றிய ஆய்வுக் கூட்டத்தில் வனத்துறை அலுவலர் கலந்து கொள்வார்.

574. பழங்குடி பகுதிகளில் பயிர்களை வளர்த்தல் குறித்து ஆய்வு செய்யும்போது சம்மந்தப்பட்ட வனத்துறை அலுவலரையும் கூட்டத்திற்கு அழைத்து ஆய்வு செய்யலாம்.

575. பழங்குடி பகுதிகளில் பள்ளிக் கட்டிடம், வனச்சாலை அமைத்தல் போன்ற வனத்துறை செயல்படுத்தும் திட்டங்களின் ஆய்வுக் கூட்டத்தில் வனத்துறை அலுவலர் கலந்து கொள்வார்.

576. வனத்துறை செயல்படுத்தும் மக்கள் நாற்றங்கால்களை நிறுவும் திட்டங்களில் வனத்துறை அலுவலரும் ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்வார்.

577. அரசு ஒதுக்கும் காடுகளுக்கும் வெளியில் உள்ள பகுதிகளில் தேன், மரப்பட்டைகள், புளி, ஏலக்காய், மூங்கில் போன்ற சிறிய வன பொருட்கள் உற்பத்தியை முறைப்படுத்த வனத்துறை செயல்படுத்தும் திட்டங்கள் பற்றிய ஆய்வுக் கூட்டத்தில் வனத்துறை அலுவலர் கலந்து கொள்வார். அரசு ஒதுக்கும் காடுகளுக்கு வெளியில் உள்ள பகுதிகளில் வனத்துறையின் சிறு வன உற்பத்திப் பொருட்கள் மேம்பாட்டுத் திட்டங்களில் ஆய்வுக் கூட்டத்தில் வனத்துறை அலுவலர் கூட்டத்தில் கலந்து கொள்வார்.

# 28. DEVOLUTION OF POWERS

## மாவட்ட ஊராட்சி

## 13. சமூக காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள்

692. சமூக மற்றும் பண்ணைக் காடுகள் திட்டங்கள் பற்றி மாவட்ட / கோட்ட வன அலுவலருடன்ஆய்வு செய்யலாம்.

693. சம்மந்தப்பட்ட சமூக காடுகள் திட்டத்தில் வரும் மலைத்தோட்ட கூழ்மரத் திட்டம் பற்றி (சில குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு) சம்மந்தப்பட்ட மாவட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

694. வனத்துறை செயல்படுத்தும் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களுக்கும் அரசு துறைகளுக்கும் தோட்டப் பயிர்களுக்கு விதைகளையும் செடிகளையும் இலவசமாக வழங்குதல் (மாநிலத் திட்டம்) போன்ற திட்டங்களில் மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

695. வனம் சாராப் பகுதிகளில் வனத்துறை செயல்படுத்தும் மூங்கில் பண்ணைகள் அமைத்தல் திட்டங்களில் மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

696. சமூக தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் பற்றி வேளாண்மை இணை இயக்குநர்,மாவட்ட / கோட்ட வன அலுவலர்களுடன் ஆய்வு செய்யலாம்.

697. பழங்குடியினர் பகுதிகளில் பயிர்களை வளர்த்தல் (மாநிலத் திட்டம்) பற்றி சம்மந்தப்பட்ட வன அலுவலர்களுடன் ஆய்வு செய்யலாம்.

698. வனத்துறை செயல்படுத்தும் பழங்குடியினர் பகுதிகளில் பள்ளிகளை கட்டுதல், வனச்சாலைகளை அமைத்தல் (மாநிலத் திட்டம்) திட்டங்களில் மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

699. வனம் சாராப் பகுதிகளில் மக்கள் நாற்றாங்கால்களை நிறுவுதல் பற்றி கோட்ட வன அலுவலர் / மாவட்ட வன அலுவலர்களை கலந்து முடிவு செய்யலாம்.

700. வனத்துறை செயல்படுத்தும் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி அதிகாரத்தில் உள்ள சாலைகளில் நிழல் தரும் மரங்களை அமைத்து பேணுதல் திட்டங்களில் மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

701. அரசு ஒதுக்கும் காடுகளுக்கு வெளியே உள்ள பகுதிகளில் வனத்துறை செயல்படுத்தும் தேன், மரப்பட்டைகள், புளி, ஏலக்காய், மூங்கில் போன்ற சிறிய வனத்துறை பொருட்களை முறைப்படுத்துதல் (மாநிலத் திட்டம்) திட்டங்களில் மாவட்ட கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

702. அரசு ஒதுக்கும் காடுகளுக்கு வெளியே உள்ள பகுதிகளில் வனத்துறை செயல்படுத்தும் வனத்துறையின் சிறு வன உற்பத்தி பொருட்கள் மேம்பாட்டுத் திட்டம் (மாநிலத் திட்டம்) திட்டங்களில் மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

703. பெரிய வகை பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் ஆய்வு செய்தல் இணை பதிவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வனத்துறை அலுவலர்களின் ஈடுபாடுடன் செயல்படுத்தலாம்.

704. வனத்துறை செயல்படுத்தும் வனத்துறையின் ஊரக எரிபொருள் விறகு பயிரிடும் திட்டங்களில் (மாநிலத் திட்டம்) மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

705. வனத்துறையின் தரம் தாழ்ந்த காடுகளை கால்நடை தீவனம் மற்றும் புல், எரிபொருள் பயிரிடும் திட்டங்களில் (மாநிலத் திட்டம்) மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

706. எரிபொருள் மற்றும் தீவனம் ஆகியவற்றை சமூக தரிசு நிலங்களில் குளங்களில் – பாசன பகுதிகளில் பயிரிடுதல் திட்டங்களில் மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

707. தீவன சிறுதொட்டிகளையும் வேர் நாற்று முனைகளையும் வழங்குதல் திட்டங்களில் மாவட்ட / கோட்ட வன அலுவலர் கூட்டத்தில் கலந்து கொள்வார்.

708. தேசிய தரிசு நில மேம்பாட்டு வாரியத்தால் நிதி உதவி பெறப்பட்டு வனத்துறையின் கீழான தீவன மேம்பாட்டுத் திட்டங்களில் மாவட்ட / கோட்ட வன அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

709. ஊரக வளர்ச்சித்துறையின் எரிவாயு தேசிய வளர்ச்சித் திட்டம் பற்றி உதவிப் பொறியாளருடன் (கரிமவாயு) ஆய்வு செய்யலாம்.

710. ஊரக வளர்ச்சித் துறையின் புகையில்லா அடுப்பிற்கான தேசிய திட்டம் பற்றி உதவிப் பொறியாளருடன் (கரிமவாயு) ஆய்வு செய்யலாம்.

அரசு செயலாளருக்காக.